விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 020 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 24 சனிக்கிழமை (08.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## "பாண்" பெற்றுக்கொள்ள இனிமேல் வரிசைதான்

### பேக்கரி உரிமையாளர் சங்கம்



(கொழும்பு)

கோதுமை மாவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக எதிர் காலத்தில் பாணுக்கு பெரிய தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக அகில 15

## இக்கட்டான கால கட்டத்தில் லங்கைக்கு இந்தியா ஆதரவளிக்கும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



(கொழும்பு)

இக்கட்டான காலகட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா எப்போது தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு எரிசக்தி பாதுகாப்பை அதிகரிக்கும் திருகோணமலை எண்ணெய் குத உடன்படிக்கையை வரவேற்றுள்ள நிலையிலேயே இந்த உறுதிமொழியை இந்தியா வழங்கியுள்ளது.

இலங்கையின் பொரு 15

## எவர் என்ன ஆட்டம் போட்டாலும்

# அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது

### ஜனாதிபதி கோட்டா சூளுரை



*(கொழும்பு)*

*"எமது அரசு நிலையான அரசு, உள்ளுக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் எவர் என்னதான் ஆட்டம்போட்டாலும் எமது அரசை ஒரு போதும் வீழ்த்தவே முடியாது" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## வவுனியாவில் இரு சிறுமிகளை ஏமாற்றிய சஜித்

(வவுனியா)

வவுனியாவில் சஜித்தின் கூட்டத்தில் நடனமாடச் சென்ற இரு சிறுமிகள் ஏமாற்றம் அடைந்த சம்பவம் ஒன்று நேற்று 15

## வவுனியாவில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் சாம்பல்தோட்டம் பகுதி கிணறு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சடல 15

## கொரோனா 16 பேர் பலி

(கொழும்பு)

கோவிட்-19 தொற்று காரணமாக நாட்டில் 15

## உரிய அமைச்சர்களை நியமிக்காததே அரசின் தோல்வி

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய அமைச்சர்களை நியமிக்க அரசாங்கம் தவறியமையே அரசாங்கத்தின் தோல்விக்கு காரணம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜ 15

## மத்திய வங்கியின் செயற்பாட்டால் இலங்கைக்கு நெருக்கடி

### வவுனியாவில் சஜித் சுட்டிக்காட்டு

(வவுனியா)

பணம் அச்சடிக்கப்பட்டாலும் பணவீக்கம் அதிகரிக்காது எனப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் கூட தனக்குத் தெரியாதவர் போல் மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் 15

## வவுனியாவில் இளம் யுவதி சடலமாக மீட்பு



(வவுனியா)

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் இளம் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய தங்கவேல் 15

## தமிழ்க் கட்சிகளின் பயணத்துக்கு தடையாக இருக்க மாட்டோம்

### மனோ, திகா, இராதா கூட்டறிக்கை

(கொழும்பு)

"இந்திய பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்பக் கடிதம்" என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளையும் உள்ளடக் 15



யாழில் சிலிண்டருக்காக வரிசையில் காத்திருக்கும் மக்கள்

## மியன்மாரிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு

(கொழும்பு)

மியன்மாரிடம் இருந்து ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கொள்வனவு செய்ய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் வீடு உடைக்கப்பட்டு பணம், நகை திருட்டு

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருஸ் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் வீடு உடைக்கப்பட்டு பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் ஒரு வாரத்திற்கு முன்பாக புதிய வீடு ஒன்றுக்கு இடம் மாறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவந்த நிலையில் முன்னதாக வசித்து வந்த பூட்டப்பட்ட வீட்டின் கதவை சூட்சமான முறையில் திறந்து வீட்டில் இருந்த நகை மற்றும் பணம் மற்றும் மடிக்கணனி உட்பட பல பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்ட நிலையில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-285)



யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனுக்கும் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத்துக்கும் இடையிலான சந்திப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம)


நீங்கா நினைவுடன்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் - 05.06.1969

மறைவு - 11.01.2020

அமரர்

திருமதி சிவலிங்கம் செல்வராணி

(ராணி)

ஈராண்டு மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவலைகள்...

(c-3469)

இல. 53, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

குடும்பத்தினர்



## தமிழ் மொழி மூலம் 2ஆம் மொழி சிங்கள ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடம்

வட மாகாணத்தில் இந்து பௌத்த கலாசார பேரவையின் 2ஆம் மொழி கற்கை நிலையத்திற்கு தமிழ் மொழி மூலம் சிங்கள மொழியை கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தங்களது கல்வித் தகைமை, சுயவிபரக்கோவை என்பவற்றை எமது இணைய முகவரிக்கு அனுப்பவேண்டும். முழுநேர ஆசிரியராகவும் பகுதிநேர ஆசிரியராகவும் விண்ணப்பிக்கலாம். முழுநேரமாக (திங்கள் தொடக்கம் வெள்ளிக்கிழமைகளிலும்), பகுதிநேரமாக (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும்) கற்பிக்கலாம்.

**விண்ணப்பத்தினை அனுப்பவேண்டிய முகவரி.**

**இந்து பௌத்த கலாசார பேரவை**

**இல. 09, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

Email :hbactc07@gmail.com

நேரிலும் வருகைதந்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கலாம்.

வடமாகாணத்திலிருந்தும் விண்ணப்பிக்க முடியும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வயது எல்லை : 25 வயதிற்கு மேற்பட்டவர்களும் இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 021 223 2072

(9464)



10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்

இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

0779265447 / 0217200989

(C-3470)



## சமையலாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு 3 நேரமும் சமையல் செய்வதற்கு பெண் சமையலாளர் தேவை. சம்பளம் 25,000/= தங்கிநின்று சமையல் வேலை செய்பவர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(C-3468)

தொடர்பு

071 411 5000


## மரண அறிவித்தல்



தோற்றம் 01 – 12 – 1986

மறைவு 07 – 01 – 2022

### கிருபானந்தன் நிஷாந்தன்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந்தன் நிஷாந்தன் நேற்று (07.01.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருபானந்தன் மற்றும் ஸ்ரீகௌரி தம்பதியரின் அன்புப் புதல்வனும் றொஷானியின் அன்புக் கணவரும் அக்ஷான், ஆத்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் சைமன் குணநாயகம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ரூபிகா, கோபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமிலஸ், கோமஸ், சயந்தன், விமோனிஷ், வலன்ரீனா, ஸ்ரீமாளி ஆகியோரின் அன்பு மைத்துனனுமாவார்.

அன்னாரின் பூதவுடலுக்கு நாளை (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் வைற் ஹவுஸ் (White House) மலர்ச்சாலையில் அஞ்சலி செலுத்தி தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லைக் கண்ணதாசன் (மாமா) : 077 034 3571

ஸ்ரீ குகன் (மாமா) : 077 698 0573

G.J. கமிலஸ் (மைத்துனன்) : 077 758 9730

(9456) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### புவனேஸ்வரன் கமலாம்பிகை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரன் கமலாம்பிகை நேற்று முன்தினம் (06.01.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. சுப்பிரமணியம் - லீலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் புவனேஸ்வரனின் பாசமிகு மனைவியும் யோகேஸ்வரி, தர்மராஜன் (டென்மார்க்), கிருபாகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவதாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), விமலராணி, நான்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ராசமணி, அமிர்தாம்பிகை, காலஞ்சென்ற பாலகிருஸ்ணன், புண்ணியசீலன், சுந்தராம்பிகை, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம், நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லக்ஷாயினி, ஹஸ்வின், அஜிரத், உமேஷ், டெஸ்னி பிரியா, டெபானோகரன், விஜிந்றிஸ்ணா, கிமாகின் ஆகியோரின் பேர்த்தியும் சிமேஸ் இன் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது சம்பியன் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 15/1, நீங்காமோனை லேன், சம்பியன் லேன், கொக்குவில்.

(9463) 077 659 6049

தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை கனகம்மா



**இணுவை மண்ணில் உதயம்**
**16.05.1934**

**கனடா மண்ணில் மறைவு**
**05.01.2022**

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கு காரைக் காலைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட **செல்லத்துரை கனகம்மா** அவர்கள் 05.01.2022 புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை– செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காலிங்கர்– பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாலட்சுமி (இலங்கை), கனகலிங்கம் (சுவிஸ்), ஜெயலட்சுமி (ஜேர்மனி), தர்மலிங்கம் (கனடா), சோதிலிங்கம் (சுவிஸ்), நடேசலிங்கம் (கனடா), விஜயலட்சுமி (ஜேர்மனி), புஸ்பராணி (இலங்கை), அன்னலட்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற காந்தி (இலங்கை), ஞானலட்சுமி (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், குமாரசுவாமி (சுவிஸ்), சரோஜினி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), விஜயலட்சுமி (கனடா), கதிர்காமராஜா (ஜேர்மனி), சர்வேஸ்வரன் (இலங்கை), புஸ்பநாதன் (ஜேர்மனி), சிவா (சுவிஸ்), வனிதா (கனடா), விநாயகமூர்த்தி (சுவிஸ்), செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமார்+கஜானி, வித்தியா+செந்தூரன், அனித்தா+நிரூபன், கஜன், லக்ஷ்மன், ரஞ்சீவன், நவீனா+வஸ்தியான், பிரவீன்+அனோஜா, பிரசாந்+சாருப்பிரியா, திவ்யா, திவிதன், சிவானா, விருஷ்கா, நவீன், வினுஜா, பிரதீபதன்+கோமதி, காண்டீபன்+அபிராமி, பிரதீபா+மோகனகுமார மங்களம், ஜனா+சேஸ், திவாகர், வினோத், நிக்சன், அஜித், நிஷாந்த், துஷாந்த், சோபிகா+ஜனார்த்தன், மிதுலா, மோகனரங்கன்+மாலினி, ஜெயபாமினி+கருணாகரன், சுபதாயினி+அம்பிகைபாலன், கோகுலராதா+குமரன், சுபாசினி+கயவிந்தன், கோபிபாலமுரளி+தாட்ஷாயினி, மீரா+சிறீகாந்த், கேதனன்+சங்கீதா, துஷித்தா+ஜெயடினேஷ், அனுஷன், ரகுவரன், தனுஷா, பூர்வீகன், கம்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரியா, சஞ்சியா, சியான், வியாஷ்ணா, அஞ்சலி, அவந்திகா, யஸ்மிதா, தனுஷா, திவீனா, அகிலன், கபிலன், திவாகர், மகீஷா, சுஜானா, மாறன், மேகலா, சாருஜா, சஜீனா, ஜெதுசன், சகானா, சாதனா, சரணியா+ரஜிவ்காந்தன், சர்மிதா, கீதன், ஜெதுசன், சாதுர்யா, அக்ஷரன், ஆத்விகா, காவியன், சாத்வீகன், பவீசன், ரக்ஷிதா, ஆதிரா, அகரன், அஹானா ஆகியோரின் அன்புப் பூட்டியும், அலீனா, அரீஸ் ஆகியோரின் அன்புக் கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.12.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா, Montreal இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9454)

**தகவல்: குடும்பத்தினர்**

**இணுவில் கிழக்கு.**

**077 382 3353**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியங்காடு பிறீமியர் லீக்

# கல்வியங்காடு ரைனோஸ் அணி சம்பியன்



சம்பியன் பட்டத்தை பெற்ற கல்வியங்காடு ரைனோஸ் அணி




கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி

கல்வியங்காடு பிறீமியர் லீக்கின் (K.P.L) இரண்டாவது பருவகால தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கல்வியங்காடு ரைனோஸ் அணிதனதாக்கியது.

ஞானபாஸ்கரொதய சங்கம் (GPS) நடத்திய கல்வியங்காடு பிறீமியர் லீக்கின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு ஜீ.பி.எஸ்.விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் கல்விய ங்காடு ரைனோஸ் அணியை எதிர்த்து கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி மோதியது.

நாணய சுழற்ச்சியில் வெற்றி பெற்ற கல்வியங்காடு ரைனோஸ் அணியின் தலை வர் தாருகாஷ் முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடு த்தாடிய கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி நிர்ணைக்க ப்பட்ட 10 ஓவர்களில் 72 ஓட்ட ங்களைப்பெற்றுக்கொண்டது.

73 என்ற வெற்றி இலக்கு டன்களமிறங்கிய கல்வியங்காடு ரைனோஸ் அணியினர் 9 பந்துப்பரிமாற்ற முடிவிலேயே வெற்றி இலக்கை அடைந்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கல்வியங் காடு ரைனோஸ் அணி வீரர் மதுசன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடராட்ட நாயகனாக தாருகாஷ் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் அதிகூடிய ஓட்ட ங்களை பிரபவனும் அதிகூடிய விக்கெட்டுக்களை தருகாஷும் பெற்றுக் கொண்டனர். (4-33)





நல்லூர் ரோட்டரி கழகத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் ரில்கோ ஹோட்டலில் நல்லூர் ரோட்டரி கழகத்தின் 2021/2022 ஆம் ஆண்டுக்கான தலைவரும் கொடிகாமம் இலங்கை வங்கியின் முகாமையாளருமான கபிலன் தலைமையில் நடைபெற்றது.இதன்போது 2023/2024 ஆம் ஆண்டுக்கான தலைவர் தெரிவு மற்றும் துவிச்சக்கரவண்டி வழங்கல் என்பன இடம்பெற்றன.2023/2024 ஆம் ஆண்டுக்கான தலைவராக யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி எம்.பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார். இதன்போது 2022/2023 க்கான தெரிவுத் தலைவரும் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் பொது சுகாதார பரிசோதகர் த.ரவினதாசும் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்படுவதையும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

# சண்டிலிப்பாயில் வீதி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக வீதியை மறித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனமும், மாதகல் பிரதேச கடற்றொழிலாளர்களும் இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்திய இழுவைமடி தொழிலை நிறுத்தும் வரை போராடுவோம், இந்திய அரசு வடக்கு மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க கோருகிறோம். எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்துவோம் போன்ற கோஷங்களை முன்வைத்தே போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால், அவ்வீதி வழியான போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டு இருந்தது.

சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தை முன்னெடுத்த பின்னர், உதவி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்து, தமது போராட்டத்தினை நிறைவு செய்தனர். (நி-5-18-33)



# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு விவகாரம் நீதிமன்றத்தை நாட எதிரணி தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பதிவான சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரியவாறான நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதுடன் அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் சுயாதீனமானதும் விரைவானதுமான விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடளித்திருந்தனர்.

இருப்பினும் அம்முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படாமையினால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், தற்போது இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடத் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்விடயம் தொடர்பில் கூறியதாவது,

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச்சம்பவங்கள் பதிவாகத் தொடங்கி சுமார் 4 - 5 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அரசாங்கம் இன்னமும் இப் பிரச்சினைக்கு உரியவாறான தீர்வை வழங்கவில்லை. எரிவாயு கலவையில் மாற்றம் செய்யப்பட்டமையே இத்தகைய வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதற்குக் காரணம் என்று சம்பந்தப்பட்ட எரிவாயு சிலிண்டர் நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறிருந்தும் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் இன்னமும் கைது செய்யப்படாததன் காரணம் என்ன?

எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் உணவகங்கள், ஹோட்டல்களின் உரிமையாளர்கள் அவற்றை மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவதற்கு எமது கட்சி தீர்மானித்திருக்கின்றது.

அதன்படி எரிவாயு சிலிண்டர் வெடிப்புச்சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வழக்குத்தாக்கல் செய்ய உள்ளோம் என்று குறிப்பிட்டார். (நி-5)

# மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி இணைந்து பிரசார நடவடிக்கை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன ஒன்றிணைந்து துண்டுப் பிரசுர பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலில் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இக்காலகட்டத்தில் ஆட்சியாளர்கள் மாத்திரம் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போதுள்ள பிரதான எதிர்க்கட்சியானது மௌனம் காத்து வரும் நிலையில் நாட்டில் ஒரு மாற்றத்தினை கொண்டுவர வேண்டுமெனில் அனைவரும் மக்கள் விடுதலை முன்னணியுடன் கைகோர்க்க வேண்டும் எனும் கருத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை திருகோணமலை நகர்ப்பகுதியில் பகிர்ந்தளித்தனர்.

குறித்த செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருன் ஹேமச்சந்திரா மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (நி-5)

## இராசிபலன்

08.01.2022
மார்கழி 24, சனிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 4.40 மணிவரை

பூரட்டாதி நண்பகல் 11.59 மணிவரை
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32-11.02 மணிவரை

சந்திராஷ்டமம்: மகம்
சஷ்டி விரதம்

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பயணத்தால் பலனுண்டு, மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வர், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிம்மம்** வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலம் சீராகும்.

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் ... பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

எல்லோரையும் உன்னைவிடப் புனிதராக நினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமத்தில் விபத்து மூவர் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொயிலா மனைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாய மடைந்தனர். கொடிகாமம் நோக்கிச் சென்ற துவிச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியே விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும் காய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதேசமயம் மோட்டார் சைக் கிளை செலுத்திச் சென்றவரும் சிறு காய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# வளைந்த பாத நோயாளர்களை சிகிச்சை அளிப்பதன் மூலம் குணப்படுத்தலாம்

## மருத்துவ நிபுணர் கோபி சங்கர்

(யாழ்ப்பாணம்)
வளைந்த பாத குறைபாடுடன் பிறக்கும் குழந்தைகளை உடனடியாக இனங்கண்டு உரிய சிகிச்சைகள் மேற்கொள்வதன் மூலம் பூரணமாக குணப்படுத்த முடியும் என யாழ். போதனா மருத்துவமனை சத்திர சிகிச்சை நிபுணர் கோபி சங்கர் தெரிவித்தார்.

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வளைந்த பாதங்களுடைய குழந்தைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்குக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சிகிச்சை முறையானது இலங்கையில் சில மருத்துவமனைகளிலேயே காணப்படுவதனால் அவர்களுடன் கைகோர்த்து இந்த சிகிச்சைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இதில் முக்கியமாக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு இல்லாததால் சரியான சிகிச்சை வழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

உடனடியாக அந்தக் குழந்தைகளை இனங்கண்டு சிகிச்சைகளை ஆரம்பிக்கும் இடத்தில் நூறு வீதம் குணப்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது.

இதற்கான அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக யாழ்.போதனா மருத்துவ மனையில் எலும்பு முறிவு பிரிவில் வழங்கப்படுகின்றது.

பிறக்கும் குழந்தைகளின் பாதத்தில் வளைவுகள் இருப்பதாக சந்தேகப்பட்டால் உடனடியாக குடும்பநல மருத்துவரிடமோ அல்லது நேரடியாகவோ எம்மை அணுகலாம் என மேலும் தெரிவித்தார். (4-5-33)

# வீட்டினுள் புகுந்த திருடர்கள் அயலவர்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் இருவர் அயலவர் களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன் தினம் இரவு மின்சாரம் தடைப் பட்டிருந்த வேளை மூவர் அடங் கிய திருட்டுக்கும்பல் புகுந்துள்ளது. அதனை அவதானித்த அயலவர்கள், குறித்த வீட்டினை வெளியில் சுற்றி வளைத்து மூன்று திருடர்களையும் மடக்கிப் பிடிக்க எத்தனித்த போது, ஒருவர் தப்பியோடிய நிலையில், இருவர் மடக்கி பிடிக்கப் பட்டனர். மடக்கி பிடிக்கப்பட்ட இருவரும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டதனை அடுத்து பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (4-5-33-104)

# உதயநாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதி வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தின நிகழ்வும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் வாழ்வக செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த.ஸ்ரீ சற்குணராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தன், கோப்பாய் "நவமங்கை நிவாசம் நிறுவுநர் சுவர்ணா நவரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு ஆசியுரையும் வழங்குவார். (5-6)

# கழிவுகள் கொட்டப்படுவதால் பொதுமக்கள் அசௌகரியம்



(கரணவாய்)
வடமராட்சி கரணவாய் மண்டன் உப்பு வீதியில் இனந் தெரியாத நபர்கள் கழிவுகளை வீசுவதால் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வீதியில் கழிவுகளைக் கொட்டுவதால் போக்குவரத்திற்கும் பாரிய சிக்கல் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே இப் பகுதியில் கழிவுகளைக் கொட்டுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-60)

# படகு கட்டும் தொழிற்சாலை மண்கும்பானில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்.மண்கும்பான் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலை மற்றும் பயிற்சி நிலையம் என்பன கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வெளிநாட்டு மற்றும் இலங்கை தனியார் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள குறித்த படகு கட்டும் தொழிற்சாலை மூலம் மண்கும்பான் பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர்-யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார நன்மைகளையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த தொழிற்சாலைக்கான பணியாளர்களாக பிரதேச இளைஞர்-யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிப்பதற்கு முதலீட்டாளர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# பாரதி விழா

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதிவிழா இன்று 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நிகழ்நிலையாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை 'தென்மராட்சி இலக்கிய அணி'யின் யூரியூப் சனலினூடாகவும் 'தென்மராட்சி இலக்கிய அணி' என்ற முகநூல் பக்கத்தினூடாகவும் கண்டுகளிக்கலாம் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4-5-30)

# யாழ்பாடி - 06 மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள யாழ்பாடி-06 பிரதேச மலரானது ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளிவரவுள்ளது.

இம் மலருக்கு கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், நாடக எழுத்துரு, ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மிகம், வரலாறு சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்களாக அமைய வேண்டும்.

கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் A4 தாளின் இரு பக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும்.

சுய படைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் ஆகாது.

ஆக்கங்களை கடித உறையிட்டு கடிதவுறையின் இடது பக்க மூலையில் "யாழ்பாடி-06 பிரதேசமலர்" எனக் குறிப்பிட வேண்டும். ஆக்கங்களுடன் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் - 2022

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2022 ஆம் ஆண்டிற்கான (01.02.2022 - 31.12.2022) குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2022.01.20 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக முன்றல், புத்தூர்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவகட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந்ததொகை (VAT,NBTநீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 01 | அக்கரைகடற்கரை– வாகனதரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலைமற்றும் சிறுவர் மகிழ்விடல் | 250.00 | 2000.00 | 56,265.00 |
| 02 | அச்சுவேலிகோழியிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 | 976,754.15 |
| 03 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 240,158.40 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 01 | நிலாவரைதிறந்தவெளிச்சந்தையும் வாகனதரிப்பிடமும் | 250.00 | 2000.00 | 587,858.33 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 01 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | 401,115.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 250.00 இனை செலுத்துதல் வேண்டும். ஏலக்கேள்வியில் தெரிவு செய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

ஏலத்தில் பங்கு பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டியல் பிரதி அல்லது வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

Covid– 19 சுகாதார நடைமுறைகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியினை 2022.01.24 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2022.01.08**

(C-3464)


# உலகளாவிய ரீதியில் உணவு பொருட்களின் விலை 28 சதவீதத்தால் உயர்வு

**(கொழும்பு)**

**ஐ.நா.சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆய்வின்படி, 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் உணவுப் பொருட்கள் விலைகள் முந்தைய ஆண்டைவிட 28 சதவீதம் உயர்ந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதன் உணவு விலைக் குறியீடு 2021 இல் சராசரியாக 125.7 ஆக இருந்தது இது ஒரு தசாப் பதத்தில் அதிகபட்ச அளவாகும்.

கடந்த ஆண்டு அனைத்து உணவுப் பொருட் களின் விலைகளும் உயர்ந்த அதேவேளை தாவர எண்ணெய் விலை 66 சதவீதமாக உயர்ந்தது. இது எப்போதும் இல்லாத அதிகபட்ச அளவாகும்.

தானியங்களின் விலை 27 சதவீதமாகவும் மக்காச்சோளம் 44.31 சதவீதமாகவும் உயர்ந் துள்ளது.

உலக உணவு மற்றும் சுகாதார அமைப்பின் கூற்றுப்படி கோதுமை விலை 31.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் இறைச்சி விலை சராசரியாக 12.7 சதவீதமாகவும் பால் பொருட்கள் 16.9 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது என ஆய்வு முடிவுகள் தெரிவிக் கின்றன. (நி-5)


தில்லையம்பதியாள் துணை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





## திரு V.S. குமாரசுவாமி

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் முன்னாள் போசகர் கலைமாமணி, கலைஞானச் சுடர், கலைத் தென்றல் V.S. **குமாரசுவாமி** அவர்கள் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 18.12.2021 அன்று நடாத்தப்பட்ட பெருவிழாவில் குறும்படத் துறைக்காக **கலைக்குரிசில்** பட்டம் பெற்றமையை இட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல பட்டங்கள் பெற தில்லை யம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாளின் ஆசி வேண்டுகின்றோம்.

## திரு சின்னத்தம்பி ஆனந்தராசா

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் முன்னைநாள் தலைவரும் கோண் டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க மத்திய சனசமூக நிலையத்தின் தலைவருமான சமூக தீபம், LION, கலாநிதி திரு. **சின்னத்தம்பி ஆனந்தராசா** (மணிவிழா நாயகன்) அவர்கள் அண்மையில் சமாதான நீதவானாக பதவி ஏற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல பட்டங்கள் பெற தில்லை யம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாளின் ஆசி வேண்டுகின்றோம்.

**பரிபாலன சபை– தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்**
**மத்திய கிராம அபிவிருத்தி சங்கமும் மத்திய சனசமூக நிலையமும்**

(C-3465)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 97 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய அன்ன பூரணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் வருகைதரு விரிவுரையாளர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் ச.அருளானந்தம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் நடனவித்தகி திருமதி.சாந்தினி சிவநேசன் ஆகியோருக்கு சிவத்தமிழ் விருது வழங்கப்பட்டது. (படம் :- ரவிசாந்)

## யாழில் சிலிண்டரை கொள்வனவு செய்ய வரிசையில் காத்திருந்த மக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நேற்று காலை முதல் யாழ்ப்பாணம் - மருத்துவமனை வீதியிலுள்ள கொட்டடி பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதன் போது, முதல் வருகை தரும் 300 பேர்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும் எனும் பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-18-33)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தின் வருடாந்த இரத்ததான முகாம் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள தனியார் இல்லத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)



யாழ்.மாவட்ட தேசோதய தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரனின் பேரனின் 6 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பெரியபுலம் பாடசாலையில் 50 மாணவர்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஒமிக்ரோன் ஆபத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது

# உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

**ஒமிக்ரோன் உருத்திரிபு வைரஸ் டெல்டாவை விட லேசான பாதிப்புகளையே ஏற்படுத்துவதாக தோற்றப்பாடு காணப்படுகிறது. எனினும் இந்தத் திரிபை குறைத்து மதிப்பிடக் கூடாது என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**



நேற்று முன்தினம் ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசிய போது உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானோம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், டெல்டாவுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரோன் தீவிரம் குறைந்ததாகத் தோன்றினாலும் இது குறித்துக் கவனயீனமாக இருக்கக்கூடாது.

ஏனைய திரிபுகளை விட ஒமிக்ரோன் அதிவேக பரவல் காரணமாக தொற்று நோயாளர் தொகை அதிகரித்துச் செல்கிறது. அத்துடன், மரணங்களும் பதிவாகி வருகின்றன.

டெல்டா மற்றும் ஒமிக்ரோன் திரிபுகளின் கலவையானது மிகத் தீவிரமாக பரவி ஆபத்தான சுனாமி போன்ற கொரோனா அலையை உலகெங்கும் ஏற்படுத்தி வருகிறது எனவும் அவர் எச்சரித்தார்.

உலகெங்கும் 5.4 மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொன்ற வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கங்கள் தொடர்ந்து போராடுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

## உலகை இன்னும் கட்டுக்குள் வைத்திருக்கும் கொரோனா 30 கோடியைக் கடந்தது தொற்றாளர் எண்ணிக்கை

(ஜெனிவா)

ஒமிக்ரோன் உருத்திரிபு வைரஸ் மின்னல் வேகத்தில் பரவி வரும் நிலையில் உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 30 கோடியை கடந்துள்ளது.

அத்துடன், கொரோனா பலியெடுத்தவர்களின் எண்ணிக்கையும் இதுவரை 54 இலட்சத்து 89 ஆயிரத்தை கடந்துள்ளது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வரையான தரவுகளின் பிரகாரம் உலகெங்கும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 கோடியே 6 இலட்சத்து 8 ஆயிரத்தைக் கடந்துள்ளது. அமெரிக்கா, இந்தியா, பிரேசில், இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகியனவே உலகில் அதிக தொற்று நோயாளர் தொகையை கொண்ட முதல் 5 நாடுகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சார்க் மாநாட்டில் பங்கேற்க முடியாது

### இந்தியா அறிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தான் தலைமையில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது என இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்கு இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளது.

நேரடியாக இல்லை என்றாலும் காணொளி வாயிலாக இந்த மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என பாகிஸ்தான் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இருப்பினும் குறித்த கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி இளைஞன் தனுஷ்கோடியில் கைது

(இராமேஸ்வரம்)


தனுஷ்கோடி கடற்பரப்பினுடாக சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பி வர முயன்ற இலங்கையர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மெரைன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இலங்கையில் இருந்து விமானம் மூலம் தமிழகத்திற்கு சென்று அங்கு தங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த குறித்த நபர் விசா முடிந்ததால் சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கைக்கு வருவதற்கு தனுஷ்கோடிக்கு வந்துள்ளார்.

சந்தேகத்திற்கிடமாக கடற்கரையில் நின்ற குறித்த நபர் குறித்து அப்பகுதி மீனவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வந்த மெரைன் பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் மல்லாவி பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (4-5-285-281)

# வவுனியா மருத்துவமனைக்கு இரத்த சுத்திகரிப்பு தொகுதி



(நெளுக்குளம்)

வவுனியா மருத்துவமனைக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவினால் இரத்த சுத்திகரிப்பு தொகுதி நேற்று கையளிக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரின் வடக்கிற்கான விஜயத்தின் முதற்கட்டமாக ஐக்கிய மக்கள் சக்தியின் 'மூச்சு' செயற்றிட்டத்தின் ஊடாக வவுனியா மருத்துவமனைக்கு 24 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு தொகுதியைக் கையளித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவருக்கு மருத்துவமனையினால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. (4-5-299)

# யாழில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மூவர் கைது

## இரு மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இரு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மீட்டனர்.

சில மாதங்களுக்கு முன்னர் சுன்னாகம் - அம்பலவாணர் வீதியில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் மற்றும் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலானாய்வு பிரிவினர் நடத்திய சோதனை நடவடிக்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையோர் பயன்படுத்திய இரு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றினர். (4-5-33)

# முதியவரிடம் வழிப்பறிக் கொள்ளை யாழில் சம்பவம்

(யாழப்பாணம்)

யாழில் வங்கியில் இருந்து பணத்தினை மீளப்பெற்று சென்ற முதியவரிடம் வழிப்பறி கொள்ளையர்கள் பணத்தினை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பழைய தபால் நிலைய வீதியில் உள்ள தனியார் வங்கியில் இருந்து பணத்தினை மீளப்பெற்றுக் கொண்டு, வீதிக்கு வந்த போது துவிச்சக்கர வண்டியில் வந்த வழிப்பறிக்கொள்ளையர்கள் பணத்தினை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-5-33)

# ஆலயங்களில் திருட்டு; ஒருவர் கைது

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் ஐந்திற்கு மேற்பட்ட கோயில்களில் நள்ளிரவு வேளை 10 இலட்சத்திற்கும் அதிகமான பொருட்கள் திருடப்பட்டதாக பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருட்கள் சில மீட்கப்பட்டன.

இத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்வதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (4-5-84)

# சங்கிலி அறுப்பு

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி தம்பிராய் சந்திப் பகுதியில் கடந்த வாரம் அடுத்தடுத்து இரு நாட்கள் பெண்கள் இருவரது தங்கச் சங்கிலிகள் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் அறுக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்களால் பூநகரி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டிற்கமைய பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-84)

# திருக்குறள் மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்தும் 20 ஆவது திருக்குறள் மாநாடும், சிலப்பதிகார விழா, பரிசில் வழங்கல், நன்மதிப்பு விழா ஆகிய நிகழ்வுகளும் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இன்று 8 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன. இரு தினங்களும் காலை, மாலை அமர்வுகள் என நான்கு அமர்வுகள் இடம்பெறும். (4-5)

# வவுனியாவில் நேற்று அதிக பனி மூட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்றுக் காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்தித்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அண்மைக்காலமாக மழையுடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்ட போதிலும் தற்போது அதிக பனி மூட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)



கிளிநொச்சியில் மின் தகன மயானத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி திருநகர் பொது மயானத்தில் நடைபெற்றது. (படம் :- தேவானந்தா, யதுபாஸ்கரன், சப்தசங்கரி)

# சந்தை வியாபாரிகள் கவனயீர்ப்புப் பேரணி



(அராலி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சங்கானை மரக்கறி சந்தை வியாபாரிகள் மற்றும் வெற்றிலை சந்தை வியாபாரிகள் இணைந்து கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

வலி. மேற்கு பிரதேச சபையி னால் விதிக்கப்படும் வரி அதிகரிப்பு மற்றும் சநதையில் உள்ள சுகாதார சீர்கேடுகள் தொடர்பிலும் குறித்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (4-5-104)

# கற்கை நெறி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா பாடநெறி முழு நேரம் மற்றும் பகுதிநேரம் ஆகியவற்றிற்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கலைப்பீடத்தினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் 22 ஆம் திகதிகளில் கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர் பட்டியல் கலைப்பீட இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையினை தொடர்பு கொண்டு கற்கை நெறிக்கான பதிவுகளை அறிமுக நிகழ்வுக்கு முன்னர் மேற்கொள்ளுமாறும் (தொலைபேசி இல.021 222 6714) மேலதிக விபரங்களை கலைப்பீட பீடாதிபதி அலுவலகத்துடன் (தொலைபேசி இல.021 222 3091) தொடர்பு கொண்டு பெறுக் கொள்ளலாமெனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் வி.காண்டீபன் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

Applications are hereby invited up to 31st January, 2022 from suitably qualified persons for the following post.

**1. POST OF LIVESTOCK ASSISTANT, GRADE III**

**Qualifications:**

i. (a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings.

**AND**

(b) Successful completion of one year's practical training course in Animal Husbandry conducted by the Department of Agriculture or equivalent.

**Age:** Not more than 40 years.

**Salary Scale** : U-MT1 (III) - Rs.31, 625-7x300; 10x355-37, 275.p.m.

**Selection By** : Interview


**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Universities Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.




**Sample Deposit Slip is given below:**

**Copies of certificates in support of the Educational/Professional qualifications and experience as at the closing date of the applications must be attached to the applications.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post as Livestock Assistant, Grade III on its top left hand corner and either hand delivered or sent under registered post to **reach the Office of the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna on or before 31.01.2022.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date and without the copies of certificates will be rejected without intimation.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA.

# செய்தித்துளிகள்

## மைத்திரியின் கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை விடுவிக்கு மாறு அவர் நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அவரது கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை அதனை நிராகரித்துள்ளது. (நி-5)

## வாகன விபத்துக்களால் நால்வர் பலி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பதிவான வாகன விபத்துக்களால் நால்வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொவிட் தடுப்பூசி மையம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலை யத்தில் 24 மணிநேரமும் இயங்கும் தடுப்பூசி ஏற்றல் மையம் இலங்கை விமானப் படையால் நிறுவப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள் இந்தத் தடுப்பூசி ஏற்றல் மையத்தில், முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 170 | 170 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 750 | 800 | 900 | 800 |
| தக்காளி | 200 | 180 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 250 | 260 | 280 | 300 |
| கரட் | 300 | 440 | 450 | 60 |
| பூசணி | 80 | 70 | 70 | 100 |
| புடோல் | 260 | 250 | — | 300 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 80 |
| சின்னவெங்காயம் | 180 | 200 | 150-250 | 400 |
| பெரியவெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 350 | 450 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 220 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 320 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | - | — | — | 400 |
| கறிமிளகாய் | 400 | 650 | 700 | 700 |
| முருங்கைக்காய் | — | — | — | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 220 | 250 |
| கத்தரிதம்புள்ள | 280 | 240 | — | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 60 |
| தேசிக்காய் | 160 | 150 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 280 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | — | — |
| முள்ளங்கி | 140 | 120 | 180 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 70 | 100 | 40 |
| வல்லாரை | 40 | 32 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 5 நாட்களில் 1,227 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

**2022 ஆம் ஆண்டில் முதல் ஐந்து நாட்களுக்குள் 1,227 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

மேலும், டெங்கு நோயைப் பரப்பும் பிரதான 4 வகையான வைரஸ் வகைகளின், மூன்றாவது வைரஸ் வகையினால் தொற்றுக்குள்ளாகிய டெங்கு நோயாளர்களும் இலங்கையில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின், சமூக மருத்துவர் அனோஜா தீரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், புத்தளம், காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்தினபுரி ஆகிய டெங்கு அவதானம் கூடிய மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# விகாரை அமைப்பதை எதிர்த்து திருமலையில் போராட்டம்

(திருமலை)



திருகோணமலை பெரிய குளம் பகுதியில் விகாரை ஒன்றினை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பெரிய குளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்காக அப் பகுதியில் உள்ள கடைகளை அகற்றித் தருமாறு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் பௌத்த துறவி ஒருவரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் அக்கடைகளை அகற்றுமாறு அறிவுறுத்திய நிலையில் ஒன்றுதிரண்ட அப்பகுதி மக்களால் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி-5)

# ஜனாதிபதியின் கொள்கை உரை இருநாள் விவாதத்தை கோரும் ஐ.தே.க.

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றில் உரையாற்றியதன் பின்னர், சபை ஒத்திவைப்பு விவாதம் ஒன்று நடத்துவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விடயமானது 1978 அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததிலிருந்து நாட்டில் பின்பற்றும் நடைமுறையாகும் என அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தின் மூலம், தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், ஜனாதிபதி ஒரு விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் 2021, டிசெம்பர் 12 நள்ளிரவு பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தார்.

இதற்கமைய பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கூடவுள்ளது.

இந்த நிலையில், அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இந்த ஒத்திவைப்பு விவாதத்தை ஜனவரி 19, 20 மற்றும் தேவைப்பட்டால் 21 ஆம் திகதியும் நடத்துவதற்கு நேரம் ஒதுக்குமாறு சபாநாயகரிடம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தல் பணிகளுக்கான விண்ணப்பங்கள்

## ஒன்லைன் ஊடாகவும் சமர்ப்பிக்கலாம்

(கொழும்பு)

2021 உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தல் பணிகளுக்கான விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களம் ஒன்லைன் ஊடாக கோரியுள்ளது.

ஆசிரியர்கள் www.doenets.lk அல்லது அமைச்சின் மொபைல் அப்ளிகேஷன் DOE மூலம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒருவர் தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## என்ன மெலிந்து விட்டீர்களே?

நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்துக் கொள்ளும் நபர்கள் தவறாமல் பரிமாறிக் கொள்ளும் கேள்வி இது. பேசுவதற்கு வேறு விடயமின்றி எல்லோரும் இந்தத் தலைப்பைத் தான் முதலில் எடுத்துக் கொள்வார்கள்.

"இப்படிச் சொல்லி என்னைக் குற்ற உணர்விற்கோ கவலைக்கோ உள்ளாகாதீர்கள்"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் உங்களுக்கு அப்படி ஒரு பிரமை"

"நீங்கள் சொல்வதில் உண்மையில்லை. உண்மையில் நான் எடை கூடியிருக்கிறேன் என்று எடை மிசின்கள் கூறுகின்றன"

"நான் அணிந்திருக்கும் துணி அப்படித் தோற்றமளிக்கிறது போலும் நான் எப்போதும் போல் தான் இருக்கிறேன்.

உங்கள் அன்புக் கண்களுக்கு அப்படித் தோற்றமளிக்கிறேன். வேறு ஒன்றுமில்லை ஆகிய ஏதோ ஒரு பதிலைத் தன்னம்பிக்கையோடு கூறிவிட்டுப் பேச்சைத் திசை திருப்ப வேண்டும். மாறாக, ஆமாம் என்றாலோ? சும்மா இருந்தாலோ? நீங்கள் கவிழ்ந்தீர்கள்.

எப்படி என்கிறீர்களா?

இப்படிச் சம்பிரதாயமாக நான்கு பேர் சொல்லச் சொல்ல அவை கீறல் விழுந்த இசைத் தட்டுக்களென மீண்டும் மீண்டும் நினைவில் ஒலித்து உள்ளத்தைப் பாதிக்கும்.

பலரும் சொல்கிறார்களே என எண்ணி உள்ளம் அதை உண்மை என நம்பத் தொடங்கும். உடனே உடல் உண்மையில் மெல்ல உருகத் தொடங்கும்.

அதாவது நமக்கு உடலில் என்ன கோளாறு? நாம் நன்றாகத் தானே சாப்பிடுகிறோம்? என்ன? ஏது? என்று கவலைப்பட்டு உண்மையில் இளைக்க ஆரம்பிக்கிறோம்.

இதுபோன்று நம்மை நோக்கி வரும் விடயங்களைப் போக்குவதற்கு விளக்குகள் வாகனங்களில் உடனுக்குடன் அனுப்புவது போல் உள்ளத்திலிருந்து அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

அவற்றிற்கு இடம் கொடுத்து வாடகைக்கு அமர்த்தக் கூடாது.

நம் உற்சாகத்தைக் குறைக்கக் கூடியதாக அமையும் இத்தகைய சம்பிரதாயமான விசாரிப்புக்களுக்கு நாம் முக்கியத்துவம் தருவோமானால் அவை பசி உணர்ச்சியைக் குறைத்து ஜீரண சுரப்பிகளை தடை செய்து ஜீரண சக்தியையும் குறைத்து விடுகின்றன.

மனப் போராட்டங்களின் போது ஏற்படும் பசி இன்மைக்கு இதுவே காரணம்.

புகழும் பணமும் பூரிப்பை ஏற்படுத்தி நிறத்தையும் உடலில் ஒருவித மினுமினுப்பையும் உண்டாகுகின்றன. கவலைகளும் பிரச்சினைகளும் உடலை உருக்கி விடுகின்றன. இவை கண்கூடான உண்மை.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## திருடன்



"நான் அவள் கணவன் அல்ல... உங்களைப்போன்ற திருடன் நான். அவள் பொய் சொல்கிறாள். என்னிடம் எந்தச் சாவியும் இல்லை. நான் சொல்வதை நம்புங்கள்" என்று கதறினான்.

"எங்களைப் பார்த்து விட்டுக் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டாய். இவள் உன் மனைவி இல்லை என்கிறாய்.

திருடன் என்று சொல்லி எங்களை ஏமாற்றப் பார்க்கிறாய். இப்படிப்பட்ட கோழையை நாங்கள் இதுவரை பார்த்தது கிடையாது. இவனை உயிருடன் விடக் கூடாது" என்று கோபத்துடன் கத்திய அவர்கள் அவனை அடிக்கத் தொடங்கினர்.

அவர்களின் உதையைத் தாங்க முடியாத அவன், "நான் சொல்வதை நம்புங்கள். நான் இவள் கணவன் அல்ல" என்று கதறி அழுதான்.

அவர்களோ அவனை அடிப்பதை நிறுத்தவில்லை. விரைந்து செயற்பட்ட நீலகண்டன் அரண்மனை வீரர்களை அழைத்துக் கொண்டு அங்கு வந்தான்.

எல்லாத் திருடர்களும் சிக்கிக் கொண்டனர். வீரர்கள் அவர்களைக் கைது செய்தனர்.

"இப்படி எதிர்பாராமல் சிக்கிக் கொண்டோமே" என்று திருடர்கள் அதிர்ச்சி அடைந்தனர். நீலகண்டனும், அவர் மனைவியும் சேர்ந்து செய்த சூழ்ச்சி அவர்களுக் குப் புரிந்தது.

நீலகண்டனிடம் வீரர்களின் தலைவன், "ஐயா! உங்களின் அறிவுக்கூர்மையால் தான் இவர்கள் எங்களிடம் சிக்கினர்.

எத்தனை நாட்களாக இவர்க்ளைப் பிடிக்க முயற்சி செய்தோம் தெரியுமா? உங்களைப் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை" என்றான்.

உதைபட்டு முனகிக் கொண்டே தரையில் கிடந்த முதலாம் திருடனை அவன் பார்த்தான்.

"ஏன் இவனை இவர்கள் இப்படி அடித்து இருக்கின்றனர்? இவனும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா? இவனையும் கைது செய்யட்டுமா?" என்று கேட்டான்.

"இவன் சிறிய திருடன். இவனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. இனி இவன் திருட மாட்டான். இவனை விட்டு விடுங்கள்" என்றான் நீலகண்டன்.

அடுத்த நாள் அரசவைக்கு வந்த நீல கண்டனை அரசர் பாராட்டினார். சொன்னது போலவே நூறு பொற்காசுகளை அவனுக்குப் பரிசாகத் தந்தார். அவனும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான். (முற்றும்)

# மகாபாரதம்



297

இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் வினையில் பங்கு உண்டு. இந்த வினையாகிய கர்மங்கள் ஏவுகின்ற படியே நாங்கள் ஒருவருக்கு ஒருவர் கட்டளையிடுகிறோம்.

கர்மங்களைச் செய்பவன் அவற்றின் பலனை அடைகிறான். நிழல் போல ஒருவனைக் கர்மப் பயன் தொடர்ந்து செல்கிறது.

ஆதலால் நானோ, எமனோ, பாம்போ, நீயோ, கௌதமியோ யாரும் இக்குழந்தையின் இறப்பிற்குக் காரணம் இல்லை. இக்குழந்தையே காரணம்" என்றான்.

காலன்அப்படிச்சொல்கையில், கௌதமி என்னும் அந்த மாது உலகெலாம்கர்மத்தின் வயப்பட்டது எனத் தெளிந்தாள். வேடனை நோக்கி, "இது விடயத்தில் காலம், பாம்பு, எமன் ஆகிய யாரும் காரணமில்லை. தான் செய்த கர்மத்தாலேயே இக்குழந்தை காலம் வந்த போது இறந்தது.

இனிக் காலதேவனும், எமனும் செல்லலாம். வேடனே நீயும் இந்த பாம்பை விட்டு விடு" என்றாள். பின் அனைவரும் பிரிந்து சென்றனர்.

"தருமா! இது கேட்டு ஆறுதல் அடைவாயாக! போர்க்களத்தில் ஏராளமானவர் மாண்டதற்கு நீயோ, துரியோதனனோ காரணமல்ல. காலத்தின் செயல் எனத் தெளிவாயாக!" என்று பீஷ்மர் கூறினார்.

### ஊழ்வினை-முயற்சி எது சிறந்தது?

"ஊழ்வினை, முயற்சி இவற்றில் எது சிறந்தது?" என்று தருமர் கேட்க பீஷ்மர் உரைக்கிறார்..

"தருமரே! இதற்கு பழைய கதை ஒன்று உண்டு.

ஒரு சமயம் வசிஷ்டர் பிரமதேவரை நோக்கி, "ஊழ்வினை, மனித முயற்சி இவற்றில் எது சிறந்தது" என கேட்டார். அதற்கு பிரம தேவர் காரண காரியங்களுடன் விளக்கினார்..

"வித்திலிருந்து முளை முளைக்கிறது. முளையிலிருந்து இலை, இலையிலிருந்து காம்பு, காம்பிலிருந்து கிளை, கிளையிலிருந்து மலர், மலரிலிருந்து கனி, கனியிலிருந்து வித்து, வித்திலிருந்து மறுபடியும் உற்பத்தி ஏற்படுகிறது.

வித்து இன்றி ஏதும் தோன்றுவதில்லை. வித்தின்றி கனி இல்லை. வித்திலிருந்து வித்து உண்டாகிறது. வித்தின்றி பயனில்லை. விதைப்பவன் எத்தகைய விதையை விதைக்கின்றானோ அவ்விதமான பயனை அடைகின்றான். அது போல நல்வினை, தீவினைக்கு ஏற்ப பயனை மனிதன் பெறுகிறான்.

நிலமில்லாது விதைக்கும் விதை பயன்தராது, அதுபோல முயற்சி இல்லா ஊழ்வினையும் பயன்தருவதில்லை. அதாவது செய்வினை பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் கருதப்படுகின்றன. நல்வினையால் இன்பமும், தீவினையால் துன்பமும் ஏற்படுகின்றன.

ஒரு செயலை முயற்சியுடன் செய்பவன் அதிர்ஷ்டத்தால் நோக்கப்பட்டு நன்மை அடைகிறான். முயற்சி செய்யாதவன்மீது அதிர்ஷ்டம் தன் பார்வையை செலுத்துவதில்லை.

நட்சத்திரங்களும், சூரிய சந்திரர்களும், தேவ தேவியரும், இயக்க இயக்கியவரும் மனிதராய் இருந்து முயற்சியினால் தேவத்தன்மை அடைந்தனர். செல்வம் முயற்சி இல்லாதவரிடம் எப்போதும் சேர்வதில்லை.

தத்தம் செயலுக்குப் பயன் இல்லையாயின், மக்கள் தெய்வத்தையே எதிர்பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யாமல் இருந்து விடுவர்.

அப்போது எல்லாம் வீணாகும். ஆனால் முயல்பவனுக்குத் தெய்வம் கைகொடுத்து உதவுகிறது. முயற்சி இல்லையானால் தெய்வம் உதவி செய்யாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கட்சி ஆட்சியமைத்தால் இன, மத பிரிவினைக்கு இடமளிக்க மாட்டேன்

## வவுனியாவில் எதிர்க்கட்சி தலைவர் சஜித்

(வவுனியா)

எனது கட்சி ஆட்சியமைக்கும் பட்சத்தில் இன,மத பிரிவினைக்கு இடமளிக்கமாட்டேன் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி என்பது நாட்டில் இதுவரை இல்லாத பொது அரசியல் அத்தியாயத்தை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல விரும்புபவர்கள் அனைவரும் இணைந்து பயணிக்கின்றார்கள். ஊழல், கொள்ளைகள் இல்லாத ஒரு அரசாங்கத்தை உருவாக்குவது எமது நோக்கம். மத்திய வங்கி கொள்ளையில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு எம்மோடு இணைய வருவார்கள்.

சுசில் பிரேமஜயந்த அவர்களை பதவி நீக்கிய விடயமானது, தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போன்ற வேலை. மக்கள் இந்த அரசாங்கத்திற்கு கொடுத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தவில்லை. முழுவதும் கண்துடைப்பாக செய்கிறார்கள். இதனை மாற்ற வேண்டும். இதற்கு புதிய மக்கள் சக்தியை உருவாக்க வேண்டும். அதற்கான வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் எம்மால் கடந்த அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டமானது மக்களின் பங்களிப்புடன் கூடியதாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதனை நாம் நடைமுறைப்படுத்தினோம். தற்போதைய அரசாங்கம் கொள்ளையடிப்பதில்தான் குறியாக இருக்கிறார்கள்.

இதனால் மக்களுக்கு எப்படி வீட்டுத் திட்டத்தை அவர்களால் வழங்க முடியும். நாம் இந்த நாட்டின் ஜனாதிபதியாகி இந்த மக்களின் வீட்டு திட்ட பிரச்சனைக்கு நிரந்தர தீர்வை வழங்குவேன் என உறுதியளிக்கின்றேன்.

இராணுவ வழி நடத்தல் அல்லது இராணுவத்தின் தலைமைத்துவம் என்பது இராணுவத்திற்குதான் பொருத்தம். எமது நாடு ஜனநாயக நாடு ஜனநாயக நாட்டை வழிநடத்துவதற்கும், கொண்டு செல்வதற்கும் தேவையானது ஜனநாயக ரீதியிலான தேர்தலும், மக்களது வாக்குகளும், அதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் தான். நாட்டின் ஆட்சியில் இராணுவ வழிநடத்தல் என்பது தேவையில்லாதது. இது சம்பந்தமாக என்னிடம் மேலதிகமாக கேட்க வேண்டாம். இந்த அரசாங்கத்திற்கும் நாட்டை இராணுவ ஆட்சியை கொண்டு செல்வது தொடர்பான எண்ணம் இருக்கும் என நான் எண்ணவில்லை.

நாட்டிற்குள் எந்தவித பிரச்சினைகளும் இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. எனது கட்சி ஆட்சியமைக்கும் பட்சத்தில் இன, மத பிரிவினைகள் ஏற்பட இடமளிக்கமாட்டோம். நாம் ஒரு நாட்டு தாயின் பிள்ளைகளாக இருப்போம்.

இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். எந்த ஒரு இனத்துடனும், மதத்துடனும் முரண்பட முடியாது. ஒரு இனம் அல்லது குறித்த தொகை மக்கள் தமக்கு பாதுகாப்பு இல்லை அல்லது தமது தேவைகள் பூர்த்தியாகவில்லை என்றால் அதனை கேட்க உரிமை உள்ளது. அதனை செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனத் தெரிவித்தார்.

(ம-250,299)

இருநாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாக

# மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ். இந்திய துணைத்தூதுவருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷை நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்திய இழுவைப் படகுகள் தொடர்பிலான பிரச்சினையைப் பற்றி மகஜர் ஒன்றை கையளிப்பதற்காக நேற்று மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய துணைத் தூதரகத்துக்கு வருகை தந்த அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே, தலைவர் நிஹால் கலப்பத்தி ஆகியோர் இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷை சந்தித்து உரையாடினர்.

அவர்கள் கையளித்த மகஜரில்,

சுமார் ஒரு தசாப்த காலமாக இலங்கையின் வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவரின் ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் வடபகுதி மீன்பிடித் தொழில் முற்றாக சரிவடைந்துள்ளது.

இந்நிலை காரணமாக வடபகுதியில் சுமார் ஐம்பதாயிரம் மீனவர்களும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களான சுமார் இரண்டு இலட்சம் பேரும் முகம் கொடுக்கும் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாகும்.

இந்திய மீனவர்களின் செயற்பாட்டினால் இந்நாட்டு மீனவர்களுக்கும், படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கும் ஏற்படும் அழிவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-18,33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 9 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கந்தையா உபாத்தியார் வீதி, கொத்தியாவத்தை, அவுனோர் (PVT) லிமிடெட், தம்றோ, கிறீன் கிறாஸ் விடுதி, ஜபிசி தமிழ், நொதேர்ன் மருத்துவமனை, யாழ்ப்பாணம் புகையிரத நிலையம், சூரிய உதயம்(வீனஸ் வைத்தியசாலை), யாழ் கேட், பி.சி.சி.ஏ.எஸ். கல்லூரி, அம்மன் வீதி, கந்தர்மடம், ஆரியகுளம்-பருத்தித்துறைவீதி, இலுப்பையடிச் சந்தி, அடைக்கலமாதா தேவாலயம், மருத்துவமனை வீதி, பலாலி வீதி, பிஸாஹட் மற்றும் ஜபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ். மருத்துவமனை, பலாலிவீதி டான் டிவி, வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிலையம், திண்ணைவிடுதி, கொமர்ஷல்வங்கி- பலாலி வீதி, பனிக்கர்லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கடற்படை முகாம், எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம்,பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, இளைஞர் படைப் பயிற்சி மையம், பேசாலை ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி, ஜோசப்வாஸ் நகர், கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, ஓலைத் தொடுவாய், பட்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, பெரிய கரைசல் பேசாலை, புதுக்குடி யிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, சணிகிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலை மன்னார்புகையிரதநிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

உணவு தேடுவதோடு உணர்வுந் தேடு.
– முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடபகுதி விவசாயிகளை வஞ்சிப்பதன் பின்னணி என்ன?

2021ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி மழை வெள்ளத்தில் மிதந்தது எனக் கூறலாம்.

அந்தளவுக்கு கடும் மழை கொட்டித் தள்ளியது.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் பெய்த மழைக்கு ஈடாக 2021ஆம் ஆண்டில் பெய்த மழை உள்ளதென யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பதிவுகள் சாட்சிப்படுத்துகின்றன.

இவ்வாறு வடக்கில் கன மழை கொட்டித் தள்ளியதால், பெரும்போக நெற்பயிர்ச் செய்கை முற்று முழுதாக அழிவடைந்தன.

எனினும் நெற்பயிர் அழிவைச் சந்தித்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் விடயத்தில் கபடத்தனமான காரியங்கள் நடந்துள்ளன என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இந்தக் கபடத்தனம் என்பது இரண்டு வழிகளில் இடம்பெற்றுள்ளன. அதில் ஒன்று பாதிக்கப்பட்ட விவசாயிகளை கடுமையாக அலைக்கழிப்பது.

அதாவது பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களை நேடியாக வழங்காமல், கமக்காரர் அமைப்பிடம் இருந்து உறுதிப்படுத்திய கடிதத்தைப் பெற்று அதனை அந்தந்தக் கமநல சேவை நிலையத்தில் ஒப்படைத்து அதன் பின்னர் விண்ணப்பத்தைப் பெறுதல்.

இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தில், நெற்பயிர் அழிவை கமக்காரர் அமைப்பும் அபிவிருத்தி உத்தியோகத்தரும் உறுதிப்படுத்துதல் என்றவாறு அந்த அலைக்கழிவு திட்டமிடப்பட்டது.

ஒரு விவசாயியின் வேலைப்பளுவை உணர்ந்துகொள்ள முடியாத மனநிலை கொண்டவர்கள் இவ்வாறானதொரு கபடத்தனத்தை வகுத்தனர்.

இதற்கு மேலாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டுத் தொகை கிடைக்காமல் செய்வதற்காக விண்ணப்பப் படிவம் தீர்ந்து விட்டது.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான காலஎல்லை முடிந்து விட்டது என்ற அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. இதுவே கபடத்தனத்தின் இரண்டாம் கட்டம்.

ஒரு விவசாயி தனக்கு ஏற்பட்ட பாதிப்பை முன்வைத்து; தனக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையைக் கோருகின்ற விண்ணப்பப் படிவத்தைக்கூட, கையில் பெறமுடியவில்லை எனும்போது இந்தக் கொடுமை எதற்காக நடக்கிறது?

தமிழர்கள் என்பதால் விவசாயக் கமத்தொழில் காப்புறுதிச் சபை இவ்வாறு செய்கின்றதா?

இதன் பின்னணியில் ஆட்சித் தரப்பு இருக்கிறதா? என்றெல்லாம் விவசாயிகள் விவாதித்துக் கொள்கின்றனர்.

எதுஎவ்வாறாயினும் நெற்பயிர் அழிவுற்று, அதற்குரிய இழப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பிக்க முடியாமல்போன விவசாயிகள் ஒன்றுகூடி தங்கள் அவல நிலையை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

தவிர, வடபகுதி விவசாயிகளுக்கு நடந்த மேற்படி அநியாயம் தொடர்பில் வடக்கின் ஆளுநர் நீதி விசாரணை நடத்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

48

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

உலக அளவில் எழுத்துகளின் வடிவங்கள் இரு வகைகளில் மாற்றம் பெற்று வருகின்றன. இயல்பாக எழுத்து வடிவங்கள் மாற்றம் பெறுவது ஒரு நிலை. திட்டமிட்டு எழுத்து வடிவங்களை மாற்றுவது மற்றொரு நிலை. இயல்பாக நிகழும் எழுத்து வடிவ மாற்றங்களுக்குத் தனி மனிதர்கள் காரணமாக அமைவது இல்லை. எழுது பொருட்களின் தன்மையே முதன்மைக் காரணமாக அமைகிறது.

தொடக்கக் காலத்தில்† என்று எழுதப்பெற்ற க என்னும் எழுத்து காலப்போக்கில் இன்றைய நிலையை அடைந்தது. இதற்கு ஓலைச் சுவடியில் எழுதும் பொழுது கையை எடுக்காமல் எழுத்துகளை எழுதி வந்ததே காரணம் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தகு மாற்றம் மெல்ல மெல்ல நிகழ்ந்ததால் அம்மாற்றம் நிகழ்ந்த காலத்தைத் துல்லியமாக நம்மால் வரையறுக்க முடியவில்லை.

தமிழி எழுத்துகளிலிருந்து தமிழ் எழுத்துகளாகவும் வட்டெழுத்துகளாகவும் மாற்றம் பெற்ற காலத்தை இன்றுவரை நம்மால் சரியாக வரையறுக்க முடியவில்லை. மேலும் ஒரே கல்வெட்டில் தமிழ் எழுத்துகளும் வட்டெழுத்துகளும் பயன்படுத்தப் பெற்றதையும் காண முடிகிறது. இவற்றிற்கெல்லாம் அடிப்படை எழுத்து மாற்றங்கள், பண்டைக் காலத்தில் இயல்பாக நிகழ்ந்து வந்ததாகத்தான் இருக்க வேண்டும்.

எழுத்துகளின் வடிவ நிலையைத் திட்டமிட்டு மாற்ற முற்படுகையில், அதற்குத் தூண்டுகோலாக இருந்தவரையும் வடிவ மாற்றம் நிகழ்வுற்ற காலத்தையும் அறிய இயலும். வடிவ மாற்றம் மேற்கொள்ளப் பெற்றதற்குரிய காரணத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

**எழுத்துகளின் வடிவங்கள் இரு வகைகளில் மாற்றம் பெற்று வருகின்றன. இயல்பாக எழுத்து வடிவங்கள் மாற்றம் பெறுவது ஒரு நிலை. திட்டமிட்டு எழுத்து வடிவங்களை மாற்றுவது மற்றொரு நிலை. இயல்பாக நிகழும் எழுத்து வடிவ மாற்றங்களுக்குத் தனிமனிதர்கள் காரணமாக அமைவது இல்லை. தொடக்ககாலத்தில்† என்று எழுதப்பெற்ற க என்னும் எழுத்து காலப் போக்கில் இன்றைய நிலையை அடைந்தது. இது இயல்பாக நடைபெற்ற மாற்றமாகும். எழுத்துகளின் வடிவ நிலையைத் திட்டமிட்டு மாற்ற முற்படுவதை எழுத்துச்சீர் திருத்தம் என்று குறிப்பிடுகின்றோம்.**

இத்தகு நிலையையே நாம் எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகின்றோம். தமிழ் எழுத்துச் சீரமைப்பு என்பது தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் வரிவடிவத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்டதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதுமான முயற்சிகளாகும்...21 ஆம் நூற்றாண்டில் கணனியில் தமிழ் பயன்பாடு அதிகரித்த பின்னர் மீண்டும் தமிழ் எழுத்துகளை சீர்திருத்த வேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ளன.

தமிழ் எழுத்துகளின் பழைய வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காண முடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப் பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம் என்று கூறியிருந்தேன்.

அதுபோல கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன என்றும் கூறியிருந்தேன். இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி (சிலம்பு 5:12) என்னும் தொடராலும் அறியலாம்.

**தமிழ் எழுத்துகளின் பழைய வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காண முடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்கள் வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகும்.**

ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகளும், பந்தி பிரித்தலும் கிடையாது.

புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா, உயிர் மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் துன்பம் அடைந்தனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.

**ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை (க், ங் போன்றவை) எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். மெய் எழுத்துக்கும், உயிர் மெய் எழுத்துக்கும் வேறுபாடுகள் இல்லாமல் இருந்தது. உதாரணமாக கக்கன் என்ற பெயரை அக்காலத்தில் ககன என்றே எழுதினர். ககன என்று எழுதப்பட்ட பெயரை, தமிழை நன்கு அறிந்தவர்களால் மட்டுமே கக்கன் என்று படித்து புரிந்து கொள்ள முடிந்தது. மேலும் ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும், பந்தி பிரித்தலும் கிடையாது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் துன்பம் அடைந்தனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.**

### தொல்காப்பியர் கால சீர்திருத்தம்

தொல்காப்பியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்து முறையில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை. மெய் எழுத்துக்கும், உயிர் மெய் எழுத்துக்கும் வேறுபாடுகள் இல்லாமல் இருந்தது. உதாரணமாக கக்கன் என்ற பெயரை அக்காலத்தில் ககன என்றே எழுதினர். ககன என்று எழுதப்பட்ட பெயரை, தமிழை நன்கு அறிந்தவர்களால் மட்டுமே கக்கன் என்று படித்து புரிந்து கொள்ள முடிந்தது. இதனை மேலும் புரிந்து கொள்ள தொல்காப்பியரின் பெயரையே உதாரணமாக எடுத்துக் கொள்வோம். தொல்காப்பியர் என்ற பெயரை அக்கால வரிவடிவில் எழுத முற்பட்டால் அவை தோலகாபபியர என்ற உச்சரிப்பையே தரும்.


இதனை மாற்ற வேண்டும் என்று விரும்பிய தொல்காப்பியர், மெய் எழுத்துக்களையும் குறில், நெடில் எழுத்துக்களையும் புரிந்து கொள்ள அவ்வெழுத்தின் மேல் புள்ளி வைக்கும் வழிமுறையை அறிமுகப்படுத்தினார்.

**மெய் எழுத்துக்களையும் குறில், நெடில் எழுத்துக்களையும் புரிந்து கொள்ள அவ்வெழுத்தின் மேல் புள்ளி வைக்கும் வழிமுறையை தொல்காப்பியர் அறிமுகப்படுத்தினார். தொல்காப்பியர் என்ற பெயரை அக்கால வரிவடிவில் எழுத முற்பட்டால் அவை தோலகாபபியர என்ற உச்சரிப்பையே தரும். அதன் தமிழி வரிவடிவத்தை நீங்கள் படத்தில் காணலாம்.**




தொல்காப்பியர்

#### தமிழி எழுத்தில் தொல்காப்பியரின் பெயர் புள்ளியிடாமல்




#### தமிழி எழுத்தில் தொல்காப்பியரின் பெயர் புள்ளியிட்டபின்




தொல்காப்பியர் காலப் பிராமி எழுத்துக்கள்

இதனால் "தோ" என்ற வரிவடிவின் மேல் புள்ளி வைத்தால் அது "தொ" என்றும் "ல" என்ற வரிவடிவின் மேல் புள்ளி வைத்தால் அது "ல்" என்றும் பொருள் தந்தது. ககன என்ற எழுத்தை கக்கன் என்று புள்ளி வைத்து எழுதும் போது முன்பை விட மிக எளிமையாக புரிந்து கொள்ள முடிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 பேர்...

மேலும் 16 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

இதனால் கொரோனாத் தொற்று காரணமாக இலங்கையில் பதிவான மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 15,099 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## கிணற்றிலிருந்து...

மாக மீட்கப்பட்டுள்ளார் .

வவுனியா சாம்பல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ரமேஸ் (வயது-34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மரணச்சடங்கு ஒன்றிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய இவர். இரவு 8 மணியளவில் குளித்துவிட்டு வருவதாக வீட்டிலுள்ள வயல் கிணற்றுக்கு சென்ற சமயமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-250,299)

## இரு சிறுமிகளை...

இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த சஜித் பிரேமதாஸ பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் பொதுமக்களுடனான அரசியல் நிகழ்வொன்று மாலை 3.30 மணியளவில் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றி முடிந்ததும் கூட்டம் நிறைவடைந்திருந்தது.

குறித்த நிகழ்வில் நடனமாடுவதற்காக இரு சிறுமிகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தனர். எனினும் கூட்டம் முடிவடைந்து அனைவரும் சென்றமையால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

எனினும் அவர்களது மனம் புண்படாத வண்ணம், அவர்களது நடன நிகழ்வு ஒரு சிலருடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (ம-250,299)

## தமிழ்க் கட்சி...

குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எனவே எமது பங்களிப்பு வட கிழக்கு தமிழ் கட்சிகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும், இந்த செயற்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம் என மனோ கணேசன், பழனி திகாம்பரம், வேலுசாமி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது.

அதேவேளை பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில்கொண்டு மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவணக் கடிதம் எழுதப்படும் என்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவுகளை கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ம)

## "பாண்"...

இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன நேற்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் பாணுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படலாம். குறிப்பாக வரிசையில் நின்றுதான் பாண் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

நாங்கள் கோதுமை மா நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அவர்களுக்கு இறக்குமதி செய்ய தேவையான டொலர்களில் 10 வீதம் மாத்திரமே கிடைப்பதாகவும் கூறினர். நாங்கள் என்ன செய்வது.

அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ம)

## உரிய அமைச்சர்...

பக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியலமைப்பின் பிரகாரம் தனது அமைச்சரவையை 30 அமைச்சர்களாக மட்டுப்படுத்துவேன் எனவும், அமைச்சரவையில் கூடுதல் உறுப்பினர்களை இணைத்து வாக்குறுதியை மீறப் போவதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள 1000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ம)

## அரசை ஒரு...

மொனராகலை - சியம்பலாண்டுவ மகா வித்தியாலயம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முற்பகல் தேசிய பாடசாலையாக மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை எதிர்பார்க்கின்றார்கள். எவ்வாறாயினும், அரசமைப்பின் மூலம் வழங்கக்கூடிய 30 அமைச்சுப் பதவிகளுக்கு மேலதிகமாக எந்தவொரு அமைச்சுப் பதவியையும் வழங்கி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறப் போவதில்லை.

மக்களுக்காக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உதவுவது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடமையாகும்.

தீர்மானங்களை எடுக்கும்போது அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை மட்டும் பாருங்கள். அவ்வாறில்லாமல் சுற்றறிக்கைகளின் மூலம் எவ்வாறு வேலை செய்யாதிருப்பதெனப் பார்க்க வேண்டாம்.

எதிர் வரும் மூன்று வருடங்களுக்கு முழு ஆதரவை அனைத்து அரச ஊழியர்களும் வழங்க வேண்டும் என்றார். (ம)

## இக்...

ளாதார நெருக்கடியை சமாளிக்க இந்தியா கடன் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சியிடம், ஊடகவியலாளர்கள் வினவியபோது, இலங்கை மக்களுக்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த "கடினமான காலங்களில்" இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சருடனான தொலைபேசி உரையாடலின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார். (ம)

## மத்திய வங்கி...

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த நாட்டை ஆர்ஜென்ரீனா, சிம்பாப்வே, வெனிசுவேலா போன்ற நாடுகளை நோக்கித் தள்ளவே மத்திய வங்கியின் ஆளுநர் செயற்பட்டு வருகின்றார் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசின் தன்னிச்சையான தீர்மானங்களால் முழு நாடும் அழிவை நோக்கிச் சென்றுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ம)

## வவுனியாவில்...

திவியா என்ற ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் யுவதியே இவ்வாறு மரணமடைந்துள்ளதுடன், யுவதியின் மரணம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-250)

## ஒரு இலட்சம்...

அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வர்த்தக அமைச்சுக்கும் மியன்மார் அதிகாரிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அரிசி, பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.(ம)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1682 திகதி 2022.01.07
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 45 48 50 92

மெகா பவர்
திகதி 07/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0988
P 09 05 21 47 59

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2022/01/07 சீட்டிழுப்பு இலக்கம் 1660
சுப்பர் இலக்கம் 06 வெற்றி இலக்கங்கள் 04 05 11 22

மஹஜன சம்பத
திகதி 2022/01/07
சீட்டிழுப்பு இலக்கம் 4640
T 4 6 2 1 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 07.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2935
H 19 29 47 72

தன நிதானய
திகதி -2022.01.07
சீட்டிழுப்பு இலக்கம் -670
E 14 24 40 73

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பு இல: 1443 வர்ணம்: ஊதா சீட்டிழுப்பு திகதி: 07.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,308,980
வெற்றி இலக்கங்கள் 04 09 26 53 Y

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பு இல: 3778 வர்ணம்: செம்மஞ்சள் சீட்டிழுப்பு திகதி: 07.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,147,020
வெற்றி இலக்கங்கள் 03 37 48 59 T

SUPER BALL
Draw Number சீட்டிழுப்பு இல 1617 Colour நிறம் இளஞ்சிவப்பு
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2022/01/07 Week Days Name தினம் வெள்ளி
F 28 60 63 75
Next Jackpot அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 53,398,038/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 118 சீட்டிழுப்பு திகதி 07.01.2022 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 29 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,083,120/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,417,565/-
திகதி 2022/01/07 வெற்றி வாரம் 3329 கன்னி வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 14 15 18 50
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,614,540/-

12 லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 11 11 17 65 72
சீட்டிழுப்பு வாரம் 793 2022.01.07 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 202,131,079/-
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 165 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

(மேட்டுநிலம், நிலப்பரப்பு)

நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்

ஒரு பரப்பின் விலை 4 இலட்சம்

(9465)

தொடர்பு

077 911 6983, 077 658 5999

077 288 0152, 077 623 4204

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

இல. 183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

Reg. No:649

Tel: 021 222 3814

### அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான மீண்டுமொரு சந்தர்ப்பம்

மேற்படி எமது சங்கத்தின் யாப்பு விதிகளுக்கு மாறாக செயற்பட்ட சங்கத்துடன் தொடர்பற்றிருக்கும் பேக்கரி உரிமையாளர்கள் தம்மை சங்கத்துடன் இணைப்பதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 15.01.2022 இற்கு முன்னர் தம்மை அங்கத்தவராகப் பதிந்து இணைந்து கொள்ளுமாறும் தவறின் மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப் படமாட்டாது என்பதையும் மேற்படி சங்கத்தின் பொதுச் சபை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முக்கிய குறிப்பு:** மற்றொரு சங்கத்தில் அங்கத்தவராக இருப்பின் குறித்த சங்கத்தில் இருந்து விலகியமைக்கான உறுதிப்படுத்தலுடன் மட்டுமே எம்முடன் தொடர்பு கொள்ள முடியும்.

செயலாளர்,
கா. பாஸ்கரன்

(C-3466)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9403)

076 825 7716 (ஆகாஸ்)

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொய்லர், பேரன்ஸ், கல்பேட் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்தும்/ செய்யாமலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

K.S. சிவகுமாரன் பாம்

இடம் மாற்றம் : தற்பொழுது முடமாவடி, கெனடி லேன், திருநெல்வேலி. (கீர்த்தனா கடைக்கு அண்மையாக)

077 684 5519 (9467)

## வேலை வாய்ப்பு

சண் சுப்பர் மார்க்கட் (Shopping mall) மானிப்பாய் புதிய கிளைக்கு வேலையாட்கள் (இருபாலாரும்), யாழ்ப்பாண கிளைக்கு (ஆண்கள்) மற்றும் Travel Agency இற்கு அனுபவமுள்ளவர்களும் தேவை.

(9453)

தொடர்பு

077 936 1427

## SB Travels & Tours Pvt Ltd.

IAIA - நேரடி முகவர்

அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, லண்டன், சுவிற்சர்லாந்து, இந்தியா, கத்தார், சிங்கப்பூர் போன்ற சகல நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பு - திருச்சி Return ticket - 32,900/=

(9459)

NO. 98, Kasthuriyar Road, Jaffna.

T.P. 021 222 8555

M. 076 691 1082, 077 108 3481

## ஊர்க்கோழி குஞ்சுகள்

1 நாள் குஞ்சு - 85/=

1 மாத குஞ்சு - 300/=

1 நாள் வான்கோழி குஞ்சு - 300/=

(9414)

077 332 2433

Rani Farm Pannagam

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, ஆரியகுளத்தை அண்மித்த பகுதியில் 3 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

பரப்பு - 75 இலட்சம்

(விலை பேசித் தீர்மானிக்கலாம்.)

(9462)

077 892 8094

076 995 2499

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3381)

0768226240 DHL

## சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணம் செய்வதற்கு வெல்டிங் வேலைக்கு ஆட்கள் தேவை

சிறந்த அனுபவம் வாய்ந்த வெல்டிங் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(9458)

077 592 5088

077 528 4567

021 222 8680

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

தரம் 06 - O/L வரையான

[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு ஆரம்பம் - 2022
09.01.2022
ஞாயிற்றுக்கிழமை

நேரம்
தரம் 9, 8, 7 - மதியம் 1.00
தரம் 10,11 - காலை 6.20

**ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கு மட்டும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**குறிப்பு:** (இதுவரை காலமும் ஆங்கில மொழிமூல வகுப்புகளிற்கு 35 மாணவர்களிற்கு மாத்திரமே அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இருந்து 50 மாணவர்கள் வரை உள்வாங்கப்படுகின்றனர்.)

அகரத்தின் வளர்ச்சிப் படிகளில்

9A பதிவுகள்

| | |
|---|---|
| 2013 - 08 | 2018 - 12 |
| 2016 - 10 | 2019 - 13 |
| 2017 - 15 | 2020 - 35 |

(9448)

ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை அலுவலகம் திறந்திருக்கும்.

"அகரம் எம்தேசக் குழந்தைகளின் ஏற்றம்..."

## Vacancy

SB Travels & Tours Pvt Ltd.

எமது கொழும்பு மற்றும் யாழ். கிளைகளிற்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை. வயதெல்லை : 18 - 30 (9460)

077 108 3481 | 011 254 0280

Email : sbtravels99@Yahoo.com

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் எமக்கு வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.) நிர்வாகி

(C-3426)

அருண் ரெக்ஸ் & பேபி நீட்ஸ் (நெல்லியடி)

077 714 9459

## வேலைக்கு ஆட்கள் தேவை

- அனுபவமுள்ள பெண் அலுவலக உதவியாளர் தேவை.
- கல்வித் தகைமை (O/L, A/L)
- கணனி அறிவுள்ளவர் விரும்பத்தக்கது. (Ms office)
- வயது (25 - 40)
- சாதி அனுமதிப் பத்திரம் விரும்பத்தக்கது.

(9457)

077 592 5088

077 528 4567

021 222 8680

## இந்து பௌத்த கலாசார பேரவையின் இரண்டாம் மொழிக் கற்கைநெறி சம்பந்தமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான விசேட அறிவித்தல்

இந்து பௌத்த கலாசார பேரவையினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழியான சிங்களம் மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஜனவரி 15ஆம், 16ஆம் திகதிகளில் அதாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளனு.

- வகுப்பு நடைபெறும் இடம் : **கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு அருகாமையிலுள்ள கட்டடத்தில்**
  சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- 120 மணித்தியாலங்கள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும்.
- வயது எல்லை : **15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களும்** வயது வந்தவர்களும் கலந்துகொள்ளலாம்.

இந்து பௌத்த கலாசார பேரவையில் அங்கத்தவராக இணைந்து கொண்டு கற்கைநெறியினை முற்றிலும் இலவசமாக கற்றுக்கொள்ளலாம். 6 மாதங்களுக்கு பின்பு அவர்களுக்கான பரீட்சை நடைபெற்று அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும். இதில் கலந்துகொள்ளும் மாணவர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கல்வி கற்கலாம். கற்பித்தலுக்கான கட்டணம் எதுவும் உங்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது.

(9464)

தொடர்புகளுக்கு

077 271 1181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.